**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.28/2020**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : பத்மநாப நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் : | வியாபாரம் | வட்டம் | : திருத்தணி |

**16.02.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 30.10.2008ம் தேதியிட்டு என் அப்பாவும் சுரேஷ்பாபுவும் G.S. மோகன் அவர்களுக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 07.01.1975ம் தேதியிட்டு தாயம்மாள் சரோஜம்மாளுக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(உயில் ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 30.05.2002ம் தேதியிட்டு பாலய்யா அவர்களுக்கு சரோஜம்மாள் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 23.01.2019ம் தேதியிட்டு மணிகண்டன் அவர்களுக்கு கன்னியம்மாள் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 28.05.1999ம் தேதியிட்டு ஜெயந்தி அவர்களுக்கு லலிதம்மாள் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 5 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** 24.07.2020ம் தேதியிட்டு 1, 7, 8 பிரதிவாதிகளுக்கு அதிகார முகவர் மோகன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (3 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ 7 வரிசை (3 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 05.08.2020ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(பதில் அறிவிப்பு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. 23.09.2020ம் தேதியிட்டு 8ம் பிரதிவாதி, ஜெயந்தி மற்றும் லலிதம்மாளுக்கு அதிகார முகவர் மோகன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ 10 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** லலிதம்மாள் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சல் உறை தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் உறை வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1975 முதல் 14.07.2020 வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. 04.06.2004ம் தேதியிட்டு என் அப்பாவும் சுரேஷ்பாபுவும் சுபாஷினி வகையறாவிடம் இருந்து கிரையம் வாங்கிய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பாவின் இறப்பு சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பாவின் வாரிசு சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்று வா.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)